படித்ததில் பிடித்தது…♥💞♥ – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/07/15/poem-8/

July 15, 2024

இரண்டு நிமிடம் மட்டுமே பேசிவிட்டு, 24 மணி நேரமும் நினைக்க வைக்க,
உன்னால் மட்டுமே முடியும்…
– Unknown

அதிசயம் நிறைந்த இவ்வுலகில் இரகசியமாய் எனிக்கென்று எனக்கான ஓர் அதிசயம் என்றால் அவனும் அவன் காதலும் தான்…!!
– Unknown

அவனின் அளவில்லா காதலுக்கு
அழியாத எஜமானி நான்
– Unknown

நிரந்தரமானவர்களுக்கு நீ குறைகளோடும் அழகாகத் தெரிவாய்…
– Unknown

பேச்சுத்துணைக்கு யார் வேண்டுமானாலும் இருக்கலாம்... ஆனால் புலம்பி தீர்க்க ஒரு நெருக்கமான உறவு இருப்பது
– Unknown

எப்போதும் இணைந்திருப்பதற்கான முதல் நிபந்தனை முடிந்தவரை இபுத்தகப்பயணம் நிம்மதியாக தனித்திருக்க விடுவதுதான்!
– மனுஷ்ய புத்திரன்

கெஞ்சிக் கொண்டே இருக்கிறேன் ஒரு கொஞ்சலுக்கு;
சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறேன்- ஒரு அணைப்பிற்கு;
பேசிக் கொண்டே இருக்கிறேன் – ஒரு முத்தத்திற்கு;
அவனை, காதலித்துக் கொண்டே இருக்கிறேன்- வரும் யுகங்கள் எல்லாம். ஒரு கரம் பிடிப்பதற்கு!!!
யுகங்கள்
– ஐஸ்வர்யா

இருக்க இருக்கத்தானே இத்தனை கசப்பு இத்தனை விலகல்?
இல்லாமல் போனால் நான் உனக்கு ஒரு புனித நினைவாகிவிடுவேன்
அப்போது நீ என்னை நேசித்திருப்பதில் உனக்கு எந்த சங்கடமும் இருக்காது எந்த பயமும் இருக்காது
இந்த உலகில் மிக அழகானது பாடம் செய்யப்பட்ட வண்ணத்துப்பூச்சிகள்
– மனுஷ்ய புத்திரன்

எனக்கு யாருமே வேண்டாமென்று யாரிடம் சொல்லிக்கொண்டு இருக்கின்றீர்களோ, அவர்கள் தான் உங்களுக்கு எல்லாமுமாக இருப்பவர்கள்.
– Unknown

புத்தகத்தில் எழுதப்பட்ட வரிகள் மட்டும் தான் கவிதை ஆகுமா?
எனக்குத் தெரிந்த ஒரு கவிதைக்கு மீசை, தாடி, அப்புறம்... புன்னகைக்கும் விழிகளும் உண்டு!
– Unknown

அடுத்த தெருவில் இருந்தாலும் ஐந்தடி தூரத்தில் இருந்தாலும்உன்னை அணைக்க முடியாது -என்று தெரிந்த மனம் அறிந்ததுஅந்த எட்டா நிலாவிற்கு ஒப்பீடு -நீ என்று-
Unknown